தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 283/2023

29.04.2026

LW: 1 PW:1

**திரு. அந்தோணி , த/பெ. பொன்னையன்**

**எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திரு. அந்தோணி என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய பெண் காவலர் திருமதி. வெண்ணிலா WPC No. 946 அடையாளம் காட்டினார்.**

**முதல்விசாரணை தொடர்ச்சி**

ஆஜர் எதிரி தான் அன்றைய தினம் எனது செல்போனை எடுத்து சென்ற நபர் ஆவார். எனது காணாமல் போன செல்போன் கிடைத்ததாக போலிசார் தெரிவித்ததின் பேரில் நான் காவல் நிலையம் சென்றேன். அங்கு போலிசார் ஆஜர் எதிரியுடன் விசாரித்து கொண்டார்கள். நான் எனது செல்போனை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். நான் தற்போது காணாமல் போன எனது செல்போனை நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். **அந்த Android Realme Cellphone அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

18.03.2023 ந் தேதி காலையில் 09.00 மணியளவில் திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்திற்கு சென்று என் செல்போனை பார்த்தேன். அப்போது அங்கு எதிரி காவல் நிலையத்தில் இருந்தார். எதிரி தான் செல்போனை எடுத்தார் என்றால் போலிசார் அடையாளம் காட்டினார் என்றால் நான் 302 வராண்டில் படுத்திருந்த போதே நான் எதிரியை பார்த்தேன். நான் மருத்துவமனையில் நுழைவு வாயிலில் படுக்கவில்லை என்றாலும், 302 வராண்டில் தான் படுத்திருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரிதான். புகாரில் உள்ள நான் சொல்ல சொல்ல தாலுக்கா காவல் நிலையத்தில் எழுதினார்கள். காலை 09.00 மணிக்கு எழுதினார்கள்.

போலிசார் விசாரணையில் ஆஜர் எதிரி சம்பவ இடத்தில் இருந்ததாகவும், அவர் போகும்போது அவரிடமிருந்து செல்போன் பவுட்ச் கீழே விழுந்ததாகவும், அதனை நான் சென்று எடுக்கும்போது அவர் சென்றுவிட்டதாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் நான் பவுட்சை எடுத்தவுடன் மருத்துவமனையில் உள்ள போலிசாரிடம் சென்று ஒருவனிடம் இருந்து பவுட்ச் கீழே விழுந்தது அதனை நான் எடுத்தபோது அவர் ஓடிவிட்டார் என்று தான் சொன்னேன். மருத்துவமனையில் உள்ள போலிசாரும் என்னிடம் விசாரித்து தெரிந்துகொண்டார்களா என்றால் தெரிந்துகொண்டார்கள்.

கீழே கடந்த எடுத்ததாக சொல்லப்படும் பவுட்சை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. மேற்கூறிய விவரங்கள் பொய் என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் எனது செல்போன் எதுவும் தொலைந்து போகவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.29 06:46:08 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்

<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No.283/2023</u>

<u>LW: 2, PW:2</u>

<u>29.04.2026</u>

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. இந்திரா | க / பெ. | திரு. அந்தோணி |
| கிராமம் | : | எடையூர் சிவராமன் நகர் | தாலுக்கா | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | வீட்டுக்குடித்தனம் | வயது | 42 |

<u>**எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திருமதி. இந்திரா என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய பெண் காவலர் திருமதி. வெண்ணிலா WPC No. 946 அடையாளம் காட்டினார்.**</u>

<u>**முதல்விசாரணை**</u>

நான் திருத்துறைப்பூண்டி தாலுக்கா எடையூர் என்ற ஊரில் வசித்து வருகிறேன். அ.சா.1 அந்தோணி எனது கணவர் ஆவார். சாட்சி சீத்தாலெட்சுமி எனது அம்மா ஆவார். கடந்த 13.03.2023 ந் தேதி எனது மகன் ஆகாஷ் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது விபத்து ஏற்பட்டு கால் முறிவு ஏற்பட்டது. அவரை சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். என் மகனுடன் நானும், எனது அம்மா மற்றும் என் கணவரும் சென்றிருந்தோம். என் மகனை 302 வார்டில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த 18.03.2023 ந் தேதி இரவு சுமார் 01.30 மணியளவில் நானும் எனது அம்மாவும் 302-வது அறையில் உள்ளே இருந்தோம். எனது கணவர் அந்தோணி வெளியில் படுத்திருந்தார். எனது கணவர் என்னிடம் எனது செல்போனை

எடுத்தியா என்று கேட்டார். அதற்கு நான் எடுக்கவில்லை என்று கூறினேன். செல்போனை காணவில்லை என்று எனது கணவர் என்னிடம் கூறினார். இதுகுறித்து எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

பொதுவாக அரசு மருத்துவமனையில் நோயாளிக்கு துணைக்கு இருப்பவர்களை தவிர மற்ற அனைவர்களையும் மருத்துவமனைக்கு வெளிப்புறத்தில் உள்ள நுழைவு வாயிலுக்கு அனுப்பிவிடுவார்கள் என்றால் சரிதான். என் கணவரும் வெளியே தான் இருந்தார் என்றால் சரிதான். இந்த சம்பவங்கள் அனைத்தும் என் கணவர் சொல்லி தான் கேள்விப்பட்டேன் என்றால் சரிதான்.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.29 06:46:20 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No.283/2023

LW: 3, PW:3

29.04.2026

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சீத்தாலெட்சுமி | க / பெ. | திரு. ஆறுமுகம் |
| கிராமம் | : | எடையூர் சிவராமன் நகர் | தாலுக்கா | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | விவசாயம் | வயது | 70 |

**எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திருமதி. சீத்தாலெட்சுமி என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய பெண் காவலர் திருமதி. வெண்ணிலா WPC No. 946 அடையாளம் காட்டினார்.**

**முதல்விசாரணை**

நான் திருத்துறைப்பூண்டி தாலுக்கா எடையூர் என்ற ஊரில் வசித்து வருகிறேன். அ.சா.1 அந்தோணி எனது மருமகன் ஆவார். அ.சா.2 இந்திரா எனது மகள் ஆவார். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது பேரன் ஆகாஷ் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது விபத்து ஏற்பட்டு கால் முறிவு ஏற்பட்டது. அவரை சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். என் பேரனுடன் நானும், எனது மகள் மற்றும் என் மருமகனும் சென்றிருந்தோம். என் பேரன் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

5 நாட்கள் கழித்து இரவு சுமார் 01.30 மணியளவில் நானும் எனது மகளும் அறையில் உள்ளே இருந்தோம். எனது மருமகன் அந்தோணி வெளியில்

படுத்திருந்தார். எனது மருமகன் செல்போனை காணவில்லை என்று தேடிக்கொண்டிருந்தார். இதுகுறித்து எனது மருமகன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

பொய்யான புகாரினை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.04.29 06:46:28 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்